# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 21, திருவள்ளுவர் ஆண்டு—2052

## 2021 செப்டம்பர் 6, திங்கட்கிழமை

*சென்னை-600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோல் செயின்."*

*பிறர் பொருளாக இருப்பினும் அதனைத் தன் பொருளைப் போலவே கருதி நேர்மையுடன் வாணிகம் செய்தலே வணிக நெறியெனப்படும்.*

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு சிறிய தகவல். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளை சுருக்கமாகக் கேட்க வேண்டும்; அதற்கான பதில்களை மாண்புமிகு அமைச்சர்கள் சுருக்கமாக, புரியும்படிச் சொன்னால் நலமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

*வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**21—**

### துணை மின் நிலையம்

***1823—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2021 செப்டம்பர் 6*

*சோழிங்கநல்லூர் தொகுதி, 14-வது மண்டலம், 168-வது வார்டு மற்றும் 169-வது வார்டு, துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.*

*சோழிங்கநல்லூர் தொகுதி, மண்டலம்-14, வார்டு எண் 168, உள்ளகரம் மற்றும் வார்டு எண் 169, புழுதிவாக்கம் பகுதிகளுக்குத் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கத்தோடு, நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆட்சியில், முன்னுரிமை அடிப்படையில், மேற்கண்ட இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதி, 14-வது மண்டலம், வார்டுகள் 168, 169, 187 மற்றும் 188, உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் பகுதிகளில் தொடர்ந்து மின்னழுத்தக் குறைபாடு உள்ளது என்று அங்கிருக்கின்ற பொதுமக்கள் மற்றும் பொது நல சங்கத்தினர் ஆகியோர் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், நான் இதுகுறித்து இன்று வினா கேட்டிருக்கின்றேன். ஆகவே, அந்தப் பகுதியில் 110 கே.வி. மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லையென்றால், 33 கே.வி. மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதிகளிலுள்ள மின்னழுத்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு மிகவும்* easy-*ஆக*

*2021 செப்டம்பர் 6]*

*இருக்குமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், உள்ளகரம் பகுதியில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், ஒரு கேள்வி போதும்.*

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** *ஒரேயொரு கேள்வி மட்டும். உள்ளகரம் பகுதியிலுள்ள மக்கள் மின் கட்டணம் செலுத்துவதற்காக, 2 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மடிப்பாக்கம் பகுதிக்குச் செல்கின்றார்கள். அருகில், அரசு வணிக வளாகம் அமைக்கப்படும் இடத்தில், மின் கட்டணம் செலுத்துவதற்கான வசதியை ஏற்படுத்தித் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, 33 கே.வி. மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஒரு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதனுடைய திட்ட மதிப்பீடு ரூ.4½ கோடி ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி மக்களுடைய நலனில் அக்கறை கொண்டு, 21–3–2018 அன்று இதே அவையில் இந்த வினா குறித்து ஏற்கெனவே எழுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, மேற்படி இடத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு, முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மின் கட்டணம் செலுத்துவதற்குப் புதிய அலுவலகம் கேட்டிருக்கின்றார். அங்கிருக்கக்கூடிய வசதி, வாய்ப்புகளைக் கருத்தில்கொண்டு, துறையின் சார்பாக ஆராய்ந்து, அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நன்றி சொல்லிவீட்டீர்கள்.*

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதி, ECR நீலாங்கரைப் பகுதியில் அதிகப்படியான குடியிருப்புகள் வருவதால், அங்கு 33 கே.வி. மின்திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்றும், OMR சோழிங்கநல்லூர் பகுதியில் TNHB மூலமாக பல்லாயிரக்கணக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன; அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் வேண்டுமென்றும், மேடவாக்கம் பகுதி வளர்ந்து வருகின்ற ஊராட்சிப் பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதியில் 110 கே.வி. மின்திறன் கொண்ட துணை மின் நிலையம் வேண்டுமென்றும், ஜல்லடியான்பேட்டை, பெரும்பாக்கம், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளிலெல்லாம் துணை மின் நிலையம் தேவை என்பதனால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுடைய தொகுதி முழுவதிலும் உள்ள ஊர்களின் பெயர்களைச் சொல்கிறீர்கள்.*

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** *மக்களுடைய நலன் கருதி, அதைச் செய்து தருகின்ற, மாண்புமிகு அமைச்சராக தாங்கள் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அதை உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், புதைவடக் கம்பிகளாக மாற்றப்படாமல் ஒருசில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளிலும் புதைவடக் கம்பிகளாக மாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, உள்ளகரம்-புழுதிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம், உத்தண்டி, ஜல்லடியான்பேட்டை, பெரும்பாக்கம், நன்மங்கலம், ஒட்டியம்பாக்கம் மற்றும் சுல்தான்பேட்டை போன்ற பகுதிகளில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், இதுகுறித்து நாளை debate இருக்கின்றது. அதில் பேசுங்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

**திரு. ச. அரவிந்த் ரமேஷ்:** *என்னுடைய தொகுதி பெரிய தொகுதியாகும். எனவே, புதைவடக் கம்பிகளாக மாற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்*

*2021 செப்டம்பர் 6]*

*வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, விடைபெறுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பது சம்பந்தமாக, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, இந்த ஆண்டு எந்தெந்த இடங்களில் பணிகள் எடுத்துக்கொள்ளப்படலாம் என்பதைக் கண்டறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்ற உறுதியைத் சொல்லிக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-05*

*சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய பணிகளில், மாநகராட்சிப் பகுதிகளில், எந்தெந்த இடங்கள் விடுபட்டிருக்கின்றன என்பது குறித்து துறையின் சார்பாக முழுவதுமாக ஆய்வு செய்யப்பட்டு முடிக்கப்பட்டிருக்கின்றன. விடுபட்ட பகுதிகளுக்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, வரும் காலங்களில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். முன்மாதிரியாக, ஒரே வரியிலே எப்படி கேள்வி கேட்கலாம் என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். அப்படிக் கேள்வி கேளுங்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்சாரம் இல்லாமல் வாழ்ந்துவிடலாம்; ஆனால் மின்சாரம் இல்லாமல் வாழ முடியாது என்று சொல்வதைப்போல மனித வாழ்க்கையில் மின்சாரம் பின்னிப் பிணைந்துள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இதை நீங்கள்* debate*-ல் பேசுங்கள். அதனால்தான் நான் சொன்னேன், நீங்கள் சுருக்கமாகக்*

கேள்வி கேட்டால், நான் வாய்ப்புத் தருவேன். இன்னும் 2 பேர் கேள்வி கேட்பதற்கு நான் வாய்ப்புத் தர வேண்டும். முன் வரிசையில் இருப்பவர்களுக்கு துணைக் கேள்வி கேட்பதற்கே வாய்ப்பில்லை. பின்னால் நிறைய பேர் வாய்ப்பு கேட்கிறார்கள். அதனால், தயவுசெய்து கேள்வியை சுருக்கமாக, pinpoint ஆகக் கேளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதியில். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அப்படிக் கேளுங்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** *பெண்ணாகரம் பகுதி எல்லாவகையிலும் தகுதி உடையதாக இருக்கிறது, பரப்பளவு அதிகம் உள்ள மேடு, பள்ளங்கள் மலைகள் நிறைந்த பகுதி. அதோடு மின் இணைப்புகளும் அதிகம் இருக்கின்ற காரணத்தால், இப்பொழுது பெண்ணாகரத்தில் இருக்கிற உபகோட்டத்தைக் கோட்டமாக அமைப்பதற்கு எல்லா தகுதியும் இருக்கிறது. அதற்குக் கீழே 11 மின்சாரப் பிரிவு அலுவலகங்கள் (Sections) ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில், 4 பிரிவு அலுவலகங்கள் மட்டுமே இருக்கின்றன. ஆகவே, மின்சாரப் பிரிவு அலுவலகங்களை ஒருங்கிணைத்து, உபகோட்டத்தைக் கோட்டமாக அமைப்பதற்கு அரசின் சார்பில் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Good. *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மின்சார வாரியத்தின் சார்பாக, 176 கோட்டங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கோட்டத்திலும் மின்சாரத்தைப் பகிர்ந்தளித்து, பணிகளைச் செய்யக்கூடிய வகையில், இணைப்புகளுடைய விகிதாச்சாரம் சரியாக இல்லை. அது துறையின் சார்பாக, முழுவதுமாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இன்னும் சில பகுதிகளில், 2 மாவட்டங்களை உள்ளடக்கி ஒரு கோட்டம் இருக்கக்கூடிய நிலையில், ஒரு மண்டலம் இருக்கக்கூடிய நிலையில், ஒரு வட்டம் இருக்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. எந்தெந்த வருவாய் மாவட்டங்களில், அந்த மாவட்டங்களுக்குட்பட்டு அலுவலகங்கள் அமைப்பது; புதிய கோட்டங்கள் அமைப்பது;*

வட்டங்கள் அமைப்பது உள்ளிட்டவை துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் அந்த அலுவலகம் துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், முன்னுரிமையின் அடிப்படையில் அந்த அலுவலகம் திறப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மின்மாற்றிகளின் overload மற்றும் low voltage ஆகியவற்றைச் சரி செய்ய, முழுவதுமாகத் துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, 8,905 புதிய மின்மாற்றிகளை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அந்தப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 108 இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கக்கூடிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற உன்னத நோக்கத்தோடு நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, புதிய அலுவலகம் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

**திரு. வி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் பாப்பரம்பாக்கத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒரே ஒரு பில்லர் போடும் பணியின்போது, அங்கிருக்கக்கூடிய நில உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதால், அந்தப் பணி கிட்டத்தட்ட 6 மாத காலமாக நிலுவையில் உள்ளது. நீதிமன்றத்தில் உள்ள வழக்கு குறித்து துறையின் சார்பாக வாதாடி, அதைப் பெற வேண்டும். பாப்பரம்பாக்கத்தில் துணை மின் நிலையம் அமைத்தால்தான் அந்தப் பகுதியில் இருக்கும் தொழிற்சாலைகள் நன்றாக இயங்க முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் துணை மின் நிலையம் அமைப்பது தொடர்பான வழக்கு விரைவாக முடிக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் துறையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வழக்கு குறித்து விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, விரைந்து அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

**திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 20 ஊராட்சிகள் பயன் பெறுகின்ற வகையிலே, ஒரு துணை மின் நிலையத்திற்கான தேவைகளையெல்லாம் செய்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் தனிப்பட்ட முறையிலே கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பத்தே நாட்களில் பெங்களூருவிலிருந்து transformer-ஐ கொண்டுவந்து ரூ.2 கோடி மதிப்பிலான அந்தப் பணிகளையெல்லாம் மிகச் சிறப்பாக நடத்திக்கொடுத்து, அதைத் துவக்குவதற்கான உத்தரவையும் பிறப்பித்து, அந்தப் பகுதி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறார். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்செங்கோடு தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

## தகவல் ஆணைய கிளை அலுவலகம்

***720—திரு. JMH. அசன் மௌலானா:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—